

நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் அம்புசிதம்பரம் திருமண மஹாலில் திராவிடப் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்ற சங்கம(மாநாடு) பொது உறுப்பினர்கள் கூட்டம் தி.ப.தொ.மு.சங்கம் தலைவர் 5 வது வார்டு செயலாளர் வி.பழனி சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர்கள் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார்.உடன் தி.ப.தொ.மு.சங்கம் பொதுச் செயலாளர்,ஒன்றிய செயலாளர் பரணி ஆர்.சேகர்,தொ.மு.ச.பேரவை அமைப்பு செயலாளர் தர்மன்,நகர் மன்ற தலைவர் செல்வ சுரேஷ் பெருமாள் உள்பட பலர் உள்ளனர்.

தள்ளாத வயதிலும் கழகத்திற்காக தளராமல் பணியாற்றிட வேண்டும் எனும் ஐயனார் போன்ற முன்னோடிகளின் உழைப்பால்

தாராபுரம் இடைத்தேர்தல் முடிவுகளும் கழக வெற்றியினை உறுதி செய்து வரலாற்றில் இடம்பெறும்!

முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

தாராபுரம், அக்.5-

தாராபுரம் இடைத்தேர்தல் பணிகளுக்காக அலங்கியம் ஊராட்சியில் பொறுப்பேற்றுக்கொண்டு, கடந்த இரு வாரங்களாகத் தேர்தல் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இப்பணிகளுக்கு இடையில், வரலாற்றின் போக்கில் அலங்கியம் குறித்த இரண்டு ஆவணங்களைக் காணும் வாய்ப்பு எனக்கு எதிர்பாராத வகையில் கிடைத்தது. ஒன்று, பதிமூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு துண்டுக் கல்வெட்டு! இரண்டாவது, 1958ம் ஆண்டிலேயே அன்றைய கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஐயா என்.வி.நடராசன் அவர்கள் அலங்கியத்தில் கழகக் கொடியேற்றி உரையாற்றிய நிகழ்வின் துண்டுப் பிரசுரம்!



முதலாவதாக, 800 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்றும் 'அலங்கியம்' என்ற பெயரே இந்த ஊருக்கு நிலைத்திருக்கிறது என்பதை, கொங்குச் சோழ மன்னனான வீரராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டைப் படித்த போது அறிந்து மகிழ்ந்தேன்.

" ஸ் வ ஸ் தி ஸ்ரீ வீரராஜேந்திர தேவற்கு யாண்டு...

பொங்கலூர்க்கா நாட்டில் அலங்கியமா(ன)...

ராசேந்திர அதியமான அவிநாசி ஆளுடைய...

பெருங்கணைச் செல்வியார் ஸ்ரீபண்டாரத்து..(பொன்)னறக் கொண்டு மண்ணற விற்ற நீர்நிலமாவது

காராண்மைக் காணி அரை மாவும் குறையும் நிபட்ட...."

என்பது அந்தக் கல்வெட்டின் பாடம். கலியுக கன்னீஸ்வரர் அல்லது திண்டீஸ்வரர் கோவில் என அழைக்கப்படும் இவ்வூர் சிவாலயத்தின் கருவறைக்கு முன்னர், தரைத்தளத்தில் பதிக்கப்பட்டுள்ள இந்தக் கல்வெட்டு, இந்த ஊரைச் சேர்ந்த வீரனான ராசேந்திர அதியமான் என்பவர் அவிநாசியில் உள்ள கோவிலுக்கு நிலக்கொடை வழங்கிய விவரத்தினைத் தெரிவிக்கின்றது.

காலப்போக்கில் மன்னனும், மக்களும், நிலத்தின் எல்லைகளும் மறைந்து போயின; ஊரின் பெயரில் ஒட்டியிருந்த உத்தம சோழ நல்லூர் என்ற பெயரும் கூட மறைந்து போய்விட்டது. ஆனால், அலங்கியம் மட்டும் இன்றும் நிலைத்திருக்கிறது.

இரண்டாவதாக, அலங்கியத்தின் இயக்க வரலாற்றில் 1958ம் ஆண்டு முதல் அழியாத கல்வெட்டாக அமைந்துவிட்ட அந்தக் கொடியேற்று விழா நிகழ்வில் பங்கேற்று, அந்தப் பெருமையுடன் இன்று தாராபுரம் நகரில் கழகத் தலைவர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உரையைக் கேட்கத் தனது 92ம் வயதிலும் துடித்துக் கொண்டிருக்கும் பெரியவர் ஐயா அய்யனார் அவர்களுடன் உரையாடும் வாய்ப்பினைப் பெற்றேன். இளமையிலிருந்து தன் உடலில் ஓடும் 'திராவிட ரத்தம்' குறித்து உணர்ச்சி பொங்கக் குறிப்பிட்ட ஐயா அவர்கள், பதினேழு கழகத் தொண்டர்களை மட்டும் கொண்டு அலங்கியத்தின் காங்கிரஸ் கோட்டையைத் தகர்த்த வரலாற்றை எனக்கு விளக்கினார்கள். உவகையும், உற்சாகமும், உணர்ச்சியும் ஊட்டிய உரையாடல் அது.

கால வெள்ளத்தில் கரைந்து போகாமல் அலங்கியம் நிலைத்து நின்று நெஞ்சினிக்கும் வரலாற்றுச் செய்திகளை நமக்கு உணர்த்துவது போலவே, தள்ளாத வயதிலும் கழகத்திற்காக தளராமல் பணியாற்றிட வேண்டும் என்ற உணர்வு மிக்க ஐயா அய்யனார் போன்ற முன்னோடிகளின் உன்னதமான உழைப்பால், தாராபுரம் இடைத்தேர்தல் முடிவுகளும் கழக வெற்றியினை உறுதி செய்து வரலாற்றில் இடம் பெறும் என்பதே அந்த உரையாடல் எனக்கு உணர்த்திய செய்தி!

இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய இடைத்தேர்தல் பொறுப்பாளர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் சீதாபுரம் முதல் பொற்பரங்கரணை வரை ஊராட்சியில் கழகத்தினருடன் ஜி.கே.குமுமம் சந்தோஷ்காந்தி, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.

தங்கள் ஆட்சியில் நடக்கும் பாலியல் கொடுமைகளுக்கு குரல் கொடுக்காத போது

பெண் உரிமை பற்றி பேச உங்களுக்கு தகுதி உண்டா முதல்வரே?

சட்டப் பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை.அக்.5.

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.

முதலமைச்சர் விஜய்யின் மதுராந்தகம் ரோடு ஷோ பிளாப்,நம் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தாராபுரம் கூட்டம் டாப் என்று சமூக வலைத்தளங்களில் நிரம்பிக் கிடக்கும் செய்திகளை பார்த்து மனம் நொந்து போன விஜய் பெண்ணை உருவ கேலி செய்வதாக தலைவர் மீது அவதூறு பரப்பி நீலிக் கண்ணீர் வடிக்கும் விஜய் அவர்களே! சொத்தில் பெண்களுக்கு சம உரிமை தந்த கலைஞர் அவர்கள் வழியில் மகளிர் உரிமைத் தொகை,மகளிர் விடியல் பயணம்,புதுமைப்பெண் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை பெண்களுக் காக தந்த தளபதி மு.க.ஸ்டாலினை பற்றி விமர்சிப்பதற்கு 30 ஆண்டுகள் திரைப்படங்களில் பெண்களை "போகப்" பொருளாக சித்தரித்து இரட்டை அர்த்த வசனம் பேசி ஆபாச அங்க அசைவுடன் நடனமாடி ஒரு தலை முறை இளைஞர் களையே சீரழித்த உங்களுக்கு பெண் உரிமைபற்றி பேச தகுதி உண்டா *CMsir?*



சட்டப்பேரவையிலும் பொது மேடைகளிலும் மூத்த தலைவர்களை உருவக்கேலி செய்வதையே வாடிக்கையாக கொண்டிருக்கும் நீங்கள் மற்றவர் களை நோக்கி விரல் நீட்டுவதற்கு என்ன தகுதி இருக்கிறது *CMsir?*

ஆட்சிக்கு வந்த பிறகு பெருகிவரும் பாலியல் வன்கொடுமை பற்றி வாய் பேசாத நீங்கள்,கட்டிய மனைவியை லட்சக்கணக் கான ரசிகர்கள் நாகூசும் வார்த்தைகளால் அர்ச்சித்த போது அதற்கு "*Worth* இல்லை"என்று பொதுவெளியில் சொன்ன நீங்கள் இப்போது பொங்கி எழுவது சாத்தான் வேதம் ஓதுவது போல் இல்லையா *CMsir?*

டிபன் பாக்ஸில் 5000 ரூபாய் வாக்காளர்களுக்கு கொடுத்தும் தாராபுரம்,மதுராந்தகத்தில் த.வெ.க.வுக்கு தோல்வி நிச்சயம் என்பதை உணர்ந்து நீங்கள் அரசின் திட்டங்களுக்காக மக்களிடமிருந்து பெற்றிருந்த செல்போன் எண்கள் மூலம் பணப்பட்டுவாடா (ஜிபே) செய்வதை மறைக்க நீங்கள் நடத்தும் நாடகம் பலிக்காது *CMsir?*

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பழனிசுப்பிரமணியன் தலைமை! நெல்லை மாவட்டம் – வி.கே.புரம்

திராவிடப் பஞ்சாலை தொ.மு.ச. பொது உறுப்பினர்கள் கூட்டம்!

நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்பு!

நெல்லை.அக்.5.

நெல்லை மாவட்டம் வி.கே.புரம் அம்பு சிதம்பரம் திருமண மஹாலில் திராவிடப் பஞ்சாலை தொழிலாளர் முன்னேற்ற சங்க (மாநாடு) மற்றும் பொது உறுப்பினர்கள் கூட்டம் தி.ப.தொ.மு. தலைவரும் 5 வது வார்டு செயலாளர் வி. பழனிசுப்பிரமணியன் தலைமையில் வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன் நகர் மன்ற தலைவர் செல்வ சுரேஷ் பெருமாள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.தி.ப.தொ.மு.சங்கம் பொதுச் செயலாளர் ஒன்றிய செயலாளர் பரணி ஆர்.சேகர் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று உரையாற்றினார்.

நிகழ்வில் தொ.மு.ச. பேரவை அமைப்பு செயலாளர் தர்மன், தொழில் நுட்ப அணி பேச்சியம்மாள், சங்க நிர்வாகிகள் சேசு தாஸ்,தென்னரசு,முருகன்,செல்வம், பாலகிருஷ்ணன்,துரைமுருகன், மாரியப்பன், பாலாஜி, சுப்பு, துரை, வாசு, செல்வராஜ், ஷேக் சையது அலி, காளிதாஸ்,லாரன்ஸ்,பூல் பாண்டியன், குமரன், சிற்பானந்த், கார்த்தி, வள்ளி, ரஞ்சித் குமார், சீனிவாசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த நலத்திட்டங்கள் இன்றும் மக்கள் பயன்பெறும் அளவில் நடைமுறையில் இருப்பதற்கு காரணமான கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியையும், பாராட்டுக்களையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் சென்னை சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் வெற்றி பெற்று தமிழக மக்களுக்காக சட்டமன்றத்தில் குரல் கொடுத்து அவை குறிப்பிலிருந்து நீக்க முடியாத அளவிற்கு கம்பீரமாக பேசும் கழக இளைஞர் அணி செயலாளர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை எதிர்க்கட்சி தலைவராக தேர்ந்தெடுத்த தற்கு இக்கூட்டம் மனதார வாழ்த்துகிறது.

ஒன்றிய அரசே,பா.ஜ.க அரசே தொழிலாளர் விரோத 4 சட்டங்களை திரும்ப பெற இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

தமிழக அரசே த.வெ.க.அரசே மின் வழித்தடத்தை தனியாருக்கு தாரை வளர்ப்பதை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

நமது ஆலையின் சீனியர் தொழிலாளர்கள் நிறைய பேர் ஓய்வு பெற்று சென்று விட்டார்கள்.வரும் காலத்தில் நிறைய பேர் ஓய்வு பெற இருப்பதால் வாரிசுக்கு வேலைக்கு வந்த ஜூனியர் தொழிலாளர்களை வேலை பார்ப்பவர்களை சீனியர் கேட்டகிரிக்கு மாற்றி அதற்கான சம்பள உயர்வையும் கொடுக்க வேண்டும் எனவும்.

அரசு துறையில் இருக்கும் பணி ஓய்வு வரும் 60 வயது போல் நமது ஆலையில் விருப்பப்படும் தொழிலாளர்கள் ஓய்வு பெறும் வயதை 58 இல் இருந்து 60 ஆக உயர்த்த வேண்டும் என ஆலை நிர்வாகத்தை கேட்டுக்கொள்கிறோம்.

நமது ஆலை ஆண்,பெண் தொழிலாளர்களுக்கு 5 வகையாக கேட்டகிரி பிரிக்கப்பட்டு சம்பள வித்தியாசமாக வழங்கி வருகின்றது. இதனை வரக்கூடிய 2027 சம்பள உயர்வு பேச்சுவார்த்தையில் சீனியர்,ஜூனியர் என இரண்டு கேட்டகிரியாக மாற்றி சம்பளம் நிர்ணயம் செய்ய வேண்டும் எனவும்.

ஆண்,பெண் தொழிலாளர்கள் நிரந்தர வேலைக்கு சேர்ந்து பணி நிரந்தரம் செய்யும் கால அளவான 2 1/2 வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் கன்பார்ம் செய்யாமல் காலம் தாழ்த்தும். நிர்வாகத்தை உடனடியாக இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறது.

சங்க நிர்வாகிகளாக இருந்தவர்கள் பெரும்பாலும் 58 வயது முடிந்து பணி ஓய்வு பெற்றுள்ளதாலும் நமது ஆலையில் வேலை செய்யும் பெண் தொழிலாளர் களையும் சங்கத்தில் சேர்த்து இருப்பதால் இனி வரும் காலங்களில் ஆண்,பெண் தொழிலாளர்களையும் தற்சமயம் நடைமுறையில் செயல்பட்டு வரும் நிர்வாகிகளுடன் இணைந்து செயல்படுவார்கள் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மதுராந்தகம் தொகுதியில் இ.பரந்தாமனை ஆதரித்து பிரச்சாரம்!

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வாக்கு சேகரித்தார்!

அச்சிறுப்பாக்கம் அக் 5.

மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு திமுக சார்பில் தீவிர வாக்கு சேகரிப்பு நடைபெற்று வருகிறது. நாளை 6ம் தேதிஇத்தொகுதியில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது

மதுராந்தகம் சட்டமன்ற இடைத் தேர்தலில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் பரந்தாமனை ஆதரித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றிய செயலாளர் தம்பு,செயற்குழு உறுப்பினர்கள் செஞ்சி விஜயக்குமார், மேல்மலையனூர் நெடுஞ்செழியன் ஆகியோர் முன்னிலையில் அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அகிலி ஊராட்சி செண்டிவாக்கம், டி.வி.எஸ்.நகர், மாத்தூர் ஊராட்சிஉள்ளிட்ட பல்வேறு இடங்களில்உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

வாக்கு சேகரித்த போது முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்

தமிழக வெற்றிக் கழக ஆட்சியை கடுமையாக விமர்சித்து பேசினார்.


அப்போது அவர் பேசிய தாவது:

"மக்களைப் பற்றி கவலைப்படாமல் ஆட்சி நடத்துகின்றனர். சினிமாவில் நடித்ததைப் போல மக்களிடமும் நடித்து, ஏமாற்றி ஆட்சிக்கு வந்துள்ளனர். இன்னும் இந்த மக்களை ஏமாற்றுவதற்காகவே பேசிக் கொண்டிருக்கிறார். உண்மையை பேசாமல் பொய்யான செய்தியை மட்டும் பேசிக் கொண்டே இருக்கிறார்.

குறிப்பாக மின் கட்டண உயர்வு இன்றைக்கு பல மடங்கு உயர்ந்துள்ளது. 200 ரூபாய் மின் கட்டணம் செலுத்தி வந்த குடிசை வீட்டில், கூரை வீட்டில் இருந்தவர்கள் இன்றைக்கு 1000 ரூபாய் செலுத்துகிற நிலை வந்திருக்கிறது. 500 ரூபாய் மின் கட்டணம் செலுத்தியவர்கள் இன்றைக்கு 2500 ரூபாய் மின் கட்டணம் செலுத்துகிற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இன்றைக்கு எல்லா விலைவாசியும் ஏறிவிட்டது. தினந்தோறும் நாம் பயன்படுத்துகின்ற அரிசி விலை, பருப்பு விலை என அனைத்தும் விலை உயர்ந்துள்ளது" என்று அவர் சாடினார்.

நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன், ஓலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜாராமன்,செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், துணைச் சேர்மன் ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை,நிர்வாகிகள் வாசு, அய்யாதுரை, பழனி, அகிலி ஊராட்சி நிர்வாகிகள் மார்டின், வேளாங்கண்ணி, ஆல்பர்ட், வருன், விஜயன், வரதராஜன், சீனு, சசிகுமார், சக்திவேல், மாத்தூர் ஊராட்சி நிர்வாகிகள் ரவி, ராஜா, ராஜேந்திரன், பாஸ்கர்,கதிரவன், கிருஷ்ணமூர்த்தி,சிதம்பரம், மனோஜ், ஜெகன், நாகப்பன், மோகன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ. பரந்தாமனை ஆதரித்து அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியம் செண்டிவாக்கம் கிராமத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வாக்காளர்களிடத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவிற்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்திற்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் வே.ஜெயபாலன்,தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர்,கடையநல்லூர் நகர செயலாளர் அப்பாஸ் ஆகியோர் தாராபுரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள பள்ளிவாசலில் தொழுகை முடிந்து வெளியே வந்த இஸ்லாமியர்களிடம் தீவிரமாக வாக்கு சேகரித்தனர்.இப்பணியில் தென்காசி நகர துணை செயலாளர் பால்ராஜ், நிர்வாகிகள் ராம்துரை, பொத்தை முருகன்,கடையநல்லூர் நகர துணை செயலாளர் மஸ்தான் அலி, நிர்வாகிகள் ராஜா முகம்மது,அப்துல் மஜீத்,சேப்பிள்ளை அலி,முன்னாள் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஹக்கீம் உட்பட பலர் பங்கேற்று வாக்கு சேகரித்தனர்.